மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாயப் பட்டறை பிரச்சினையை, அந்தப் பகுதி மக்கள் பயன் அடைகின்ற அளவிற்கு, அதேபோல, பாதிக்கப்படாத அளவிற்குச் சரி செய்வதற்கு ஒரு தொகை கோரப்பட்டு, அந்தத் தொகையைப் பகிர்ந்து கொடுக்கின்ற முயற்சியில் ஆலை முதலாளிகள் யாரும் இன்னும் ஈடுபடவில்லை. அவர்கள் ஈடுபட்டு, அந்த முயற்சியை மேலும் ஊக்கப்படுத்துவார்களேயானால், அது அவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும், அந்தப் பகுதி மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும். அதற்கான பணிகளில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

முற்பகல் 9—55

(இ) விவசாயத்திற்கு நாளொன்றுக்குப் பதினாறு மணி நேரம் மின்சாரம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்.*

திரு. கு. பாண்டுரங்கன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அபரிமிதமாகப் பொழிய வேண்டிய தென்மேற்குப் பருவமழை இந்த ஆண்டு தமிழகத்தில் தாமதமாகத் தொடங்கி, ஆண்டு சராசரியைவிட 23 சதவிகிதம் குறைவாகப் பொழியும் என மத்திய அரசு செய்தி வெளியிட்டுள்ளது.*

தொண்டை மண்டல வேளாண் பெருமக்கள் வாழ்வில் தேனாறாக ஓடும் பாலாறுகூட, பக்கத்து மாநிலத்தின் பாதகத்தால் பறிபோய்விடும்போல இருக்கிறது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் நீராதாரமின்றி நிர்க்கதியாக நிற்கும் தொண்டை மண்டல விவசாயிகளுக்குத் துணை நின்று கைகொடுப்பது, கிணற்று நீர்ப் பாசனம்தான். இதற்கும் போதுமான நேரம் மின்சாரம் இருக்க வேண்டும். நெல் சாகுபடி என்பது தமிழகம் முழுவதும் நடைபெறுகிறது. இதைக் கருத்தில்கொண்டு, காவிரி டெல்டா விவசாயிகளுக்கு வழங்கிக்கொண்டிருப்பதைப்போல, தொண்டை மண்டலம் உள்ளிட்ட தமிழகம் முழுமைக்கும் வேளாண் பெருமக்களுக்கு 16 மணி நேரம்

2009 ஜூலை 21] [திரு. கு. பாண்டுரங்கன்]

வேளாண் பணிகளுக்காக மின்சாரம் விநியோகிக்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதிக்காக, மின்சார இலாகா மாண்புமிகு தமிழக முதல்வரவர்களுடைய அனுமதியோடு அவ்வாறு விதிவிலக்களித்து 16 மணி நேரம் மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாடு முழுவதும் அவ்வாறு விதிவிலக்களித்து, 16 மணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டுமென்று சொன்னால், 19 இலட்சம் பம்பு செட்டுகள் இருக்கக்கூடிய தமிழ்நாட்டில், மேலும் ஒரு ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தேவைப்படும். எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் இதுகுறித்துப் பரிசீலிக்க இயலாத நிலையில் இருக்கிறோம். இருந்தாலும்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்தாலோசித்து ஏதாவது செய்ய முடியுமென்றால், அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபடும்.

(ஈ) தீப்பெட்டித் தொழில், பொட்டாஷியம் குளோரேட் மூலப் பொருள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில்தான் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கான raw material ஆன potassium chlorate தொழிற்சாலைகள் தமிழகத்தில் 40–க்கும் மேலாக இருந்தன. ஆனால், தற்போது ஒன்றுகூட இல்லை. காரணம், தமிழ்நாட்டில் H.T. இண்டஸ்ட்ரிக்கு மின்சாரக் கட்டணம் மிகவும் அதிகமாக, அதாவது ஒரு யூனிட்டுக்கு ரூ.4.20–ம் maximum demand-க்கு 300 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது. அதனால் குளோரேட் தொழிற்சாலைகள் அனைத்தும் கேரளாவிலும், பாண்டிச்சேரியிலும்தான் உள்ளன. ஆனால், அந்த மாநிலங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளேயில்லை. தமிழகம் முழுவதும் தீப்பெட்டித் தொழிலுக்கு பிரதான மூலப் பொருளாக விளங்கும் பொட்டாஷியம் குளோரேட்டுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால், எங்கள் தென் தமிழகத்தில்